**போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டம் - கூறு 02 (மாகாண வீதி முன்னேற்றம்) - 2019**

---

போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டம் - கூறு 02 (மாகாண வீதி முன்னேற்றம்) இன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 செப்தெம்பர் 29 ஆம் திகதிய 5788–எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் 01 ஆம் பட்டியலின் 4.2 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

திருத்திய நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சாகவிருந்த தற்போதைய அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் அனைத்து மாகாணங்களிலும் உள்ள மாகாண வீதி அதிகாரசபைகள் செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. சொத்து முகாமை தொடர்பான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திறனை பலப்படுத்துதல் மற்றும் மாகாண வீதிகளிற்கான நுழைவு மற்றும் முகாமைத்துவ கட்டமைப்பை முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 21,875 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 125 மில்லியன் தொகையாகும். செயற்திட்ட நிதியளிப்பு உடன்படிக்கைக்கான திருத்தத்தின் பிரகாரம் கூறு – 02 இன் திருத்திய மாதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 19,075 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 109 மில்லியன் தொகையானதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2019 மே 02 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 மார்ச் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை

பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை<br>ரூபா மில்லியன் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | வேலை ஆரம்பிப்பு முற்பணமாக நான்கு ஒப்பந்ததாரர்களிற்கு ரூபா 81.55 மில்லியன் மொத்த தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் வேலை ஆரம்பிப்பு முற்பணம் முறையே சிவில் வேலைகளிற்கான இறுதிக் கொடுப்பனவு மற்றும் நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 81.55 | நிதிக்கூற்றுக்களின் தவறான கூற்று | இவ்விடயம் எதிர்காலத்தில் சீர்செய்யப்படும். | நிதிக்கூற்று கணக்கீட்டு நியமத்துடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | நிதியளிப்பு உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் பிரகாரம் மீளப்பெறப்படாத கடன் மீதி மீதான கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் மீளப்பெறப்பட்ட கடன் மீதி மீதான சேவைக் கட்டணம் மற்றும் வட்டி என்பன நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | - | -மேற்படி- | கொடுப்பனவு பதிவறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. | சேவைக் கட்டணம் மற்றும் வட்டியுடன் கணக்குப் புத்தகங்களை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆகஸ்ட் 15 ஆம் திகதிய 18/1682/805/051 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு மற்றும் மாகாண மட்ட அமுல்ப்படுத்தல் பிரிவுகள் என்பன வரிசை அமைச்சில் காணப்படக்கூடிய பொருத்தமான பதவியணியினரை உள்ளீர்ப்பதன் மூலம் ஸ்தாபிக்கப்பட வேண்டியிருந்தன. | அமுல்ப்படுத்தலின் வெற்றியை இது பாதிக்கும். | செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவிற்கு அமைச்சின் பொருத்தமான பதவியணியினரை உள்ளீர்த்தல் தேவையானதாக காணப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவைத் தீர்மானத்துடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | செயற்திட்ட வழிகாட்டல் குழுக்களின் கூட்டங்கள் 02 மாதங்களிற்கு ஒரு தடவை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ஒரு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளை கண்காணித்தல் செயற்திறனாக மேற்கொள்ளப்படாது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயற்திட்ட வழிகாட்டல் குழுக்களின் கூட்டங்கள் ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். |
| (இ) | 2019 சனவரி 12 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களச் சுற்றறிக்கை | ஆண்டின் போது நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது கூட்டங்களெதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளை கண்காணித்தல் செயற்திறனாக மேற்கொள்ளப்படாது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் கூட்டங்கள் ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| மீள்கட்டமைப்பு பத்திரத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 18 வேலைப் பொதிகளின் கீழ் ரூபா 7,692.30 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 67 மாகாண வீதிகளின் 302 கிலோமீற்றர் நீளத்தை புனரமைத்து பராமரிப்பதற்கான ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் 8 வேலைப் பொதிகள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்ததுடன் வழங்கப்பட்ட ஒப்பந்த வேலைப் பொதிகள் தொடர்பாக எதுவித பௌதீக செயன்முன்னேற்றமும் அடைந்துகொள்ளப்பட்டிருக்கவில்லை. | (அ) செயற்திட்டத்தை பூர்த்திசெய்வதில் தாமதங்கள்<br>(ஆ) கிரய மதிப்பீட்டின் மிகையான ஓட்டம்<br>(இ) குறித்துரைக்கப்பட்ட தரப்பினர்களால் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை பெறுகை குழுவால் விலை முரண்களை மீளாய்வு செய்வதற்கு காலம் எடுத்திருந்தது. | பெறுகை செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீடு மற்றும் வேலைத்திட்டம் என்பன வழிகாட்டல் குழுவிடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட செய்னமுன்னேற்றம் உரிய காலத்தில் மதிப்பிடப்பட முடியாதிருந்ததுடன் கவனமில்லாமை. | வேலைத்திட்டம் மற்றும் பாதீடு என்பன வழிகாட்டல் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பாதீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றை தயாரித்து அவற்றிற்கான அங்கீகாரத்தை வழிகாட்டல் குழுவிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவிற்கான நிதி முகாமையாளர் (பிஎஸ்-3) மற்றும் ஒன்பது கணக்காளர்கள் (பிஎஸ்-4) ஆகியோர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்திற்கான நிதி முகாமைத்துவ முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | பலவீனமான நிதி முகாமைத்துவம். | “Quick Book” என அழைக்கப்படுகின்ற மென்பொருளை கொள்வனவு செய்வதற்காக பெறுகை செயன்முறை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் நிதி முகாமைத்துவ முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்ட செயற்பாட்டுக் கைநூல் தற்போது வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவக ரீதியான துறை, நிர்வாகம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு செயன்முறை என்பவற்றில் வழிகாட்டல்கள் பிரயோகிக்கப்படாமல் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் நிதி முகாமைத்துவ முறைமை மற்றும் பெறுகை செயன்முறை என்பனவும் ஸ்தாபிக்கப்பட வேண்டியுள்ளன. | தேசிய வழிகாட்டல் குழுவிடமிருந்தான அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகின்றது. | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்ட செயற்பாட்டு கைநூல் தயாரிக்கப்பட்டு அதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |